**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**
**அசல் வழக்கு எண்.90/2015**

நாள்: 19.06.2024

பெயர்: பாண்டியன் (வா.சா.1) த/பெ: மணி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ...**

1) தாவா சொத்து 19 சென்ட் சர்வே எண்.379/6A வில் கட்டுப்பட்டது என்றால் சரிதான். தாவா சர்வே எண்.379/6 க்கு நேர் மேற்புறம் சர்வே எண்.379/5 என்றால் எனக்கு தெரியாது. அதன் அனுபவம் யாரிடம் உள்ளது என்றால் கலியபெருமாள் என்பவரிடம் உள்ளது. கலியபெருமாளின் தந்தை பெயர் எனக்கு தெரியாது. அதற்கு மேற்புறம் தென்வடல் ரோடு என்றால் சரிதான். கலியபெருமாளின் சொத்து என்பது சர்வே எண்.379/4B என்றால் இருக்கலாம். சர்வே எண்.379/4B க்கும் சர்வே எண்.379/6A க்கும் இடையில் சர்வே எண்.379/5B உள்ளது என்றால் இருக்கலாம்.

2) தாவா சொத்திற்கு கீழ்புறம் உள்ள சொத்து ஏற்கெனவே கல்யாணி சொத்து என்றால் கல்யாணி மற்றும் குழந்தைசாமி உடையார் உள்ளார். கல்யாணி என்பவர் உறவு முறையில் என்னுடைய சின்னதாத்தாவின் மனைவி ஆவார். தாவா சொத்திற்கு கிழக்கே உள்ள கல்யாணி, 1ம் பிரதிவாதி ராயருக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். மேற்படி கிரையமானது 13.12.1989 ல் ஏற்பட்டது என்றால் சரிதான். கல்யாணியிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தை 1ம் பிரதிவாதி அவருடைய மகன், 2ம் பிரதிவாதி வேல்முருகனுக்கு 04.02.2014 ல் தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்து விட்டார் என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு தெற்கில் பழஞ்சாலை பாதை என்றால் சரிதான். அந்த பாதைக்கு மேற்கில் சந்திரஏரி உள்ளது என்றால் சரிதான்.

3) தாவா சொத்திற்கு நேர் வடபுறம் 1ம் பிரதிவாதிக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். தாவா சர்வே எண்.379/6ல் கட்டுப்பட்ட சொத்திற்கு கீழ்புறம் உள்ள சொத்திற்கு அசல் வழக்கு எண்.360/2011 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் எந்த புறம் என்று தெரியாது. வழக்கு நிலுவையில் உள்ளது. தாவா சொத்தை நான் 1ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் வாங்கினேன். தாவா சொத்தை என் தந்தையும், என் தாத்தாவும் சேர்ந்து 1ம் பிரதிவாதிக்கு 10.06.1981ல் கெடு கிரையம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார்களா என்றால் கிரையம் ஏற்படுத்தி கொடுத்தது மட்டும் தெரியும்.

4) கெடு கிரையத்தை அனுசரித்து 1ம் பிரதிவாதி கிரைய சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. அனுபவம் செய்து வந்தார். தாவா சொத்தில் கீழ்புறம் 11 சென்ட் கணபதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் அந்த சொத்து 16.07.1979ல் பொன்னுசாமி என்கிற மொட்டை படையாட்சியிடமிருந்து கணபதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் சரிதான். கணபதி மற்றொரு பெயர் ராஜாங்கம் என்றால் சரிதான். பத்திரப்படி கணபதி என்கிற ராஜாங்கம் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். கணபதி அனுபவித்து வந்த சொத்தை 10.06.1998ல் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான்.

5) 10.06.1998ல் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தை தற்சமயம் 1ம் பிரதிவாதிதான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1ல் கண்ட சொத்திற்கு மேற்புறம் சர்வே எண்.379/5B சொத்து உள்ளது என்றாலும், அந்த சொத்திற்கு மேற்புறம் சர்வே எண்.379/4B உள்ளது என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கு பட்டாவானது கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்புறம் சர்வே எண்.379/5B ல் 1ம் பிரதிவாதி, அவருடைய

மகன் ஜெய்கணேஷ் 4ம் பிரதிவாதிக்கு 06.11.2013 தேதியில் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றாலும் அதன்படி அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் எனக்கு தெரியாது.

6) தாவா சொத்திற்கு குறுக்கே வரப்பு உள்ளதா என்றால் ஆமாம். தாவா சொத்தில் மேற்புறமுள்ள 8 சென்டை 1ம் பிரதிவாதியிடம் கிரையம் கொடுப்பதற்காக ரூ.25,000/– பெற்றுகொண்டேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கொடுத்த பணத்தை திரும்ப கேட்டதால் தாவா சொத்திற்கு கீழ்புறமுள்ள 11 சென்டையும் சேர்த்து மொத்தம் 19 சென்டிற்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து முழுவதும் 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான்தான் அனுபவம் செய்து வருகிறேன். 28.01.2015 தாவா சொத்தை பொறுத்து RDO விடம் மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

7) நான் கொடுத்த மனுவின் பெயரில் என்னையும், 1ம் பிரதிவாதியையும் அழைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். விசாரணையின்போது நான் எனது பத்திரத்தை சமர்பித்தேன். பிரதிவாதி அவரது பத்திரத்தை சமர்பிக்கவில்லை. பத்திரங்கள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொல்லிவிட்டார். நான் RDO விடம் கொடுத்த புகாரில் தாவா சொத்தை ராயர் வகையறாக்கள் அனுபவித்து வருகிறார்கள் என்று சொல்லி புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. RDO விசாரணையில் உரிமையியல் வழக்கு சம்பந்தமாக இருப்பதால் உரிமையையில் நீதிமன்றத்தை நாடி தீர்வு கானும்படி அறிவுறுத்தி அனுப்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கை தாக்கல் செய்த பிறகு எதிர் வழக்குரையில் பிரதிவாதிகள் தாவா சொத்தில் தங்களுக்கு பாத்தியம் என்று சொல்லியுள்ள போதிலும் விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும்

கோரியுள்ளதால் தாவா நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் தவறான நான்கெல்லை ஏற்படுத்தியுள்ளதால் வா.சா.ஆ.1 செல்லாது என்றால் சரியல்ல. என் தந்தை மற்றும் என் தாத்தா, 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கெடு கிரைய பத்திர்த்தை தாக்கல் செய்தால் உண்மை நிலவரம் நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடும் என்பதால் கெடு கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணம் என் வசம் இல்லை. வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 வரையுள்ள ஆவணங்கள் தாவா சர்வே எண்ணில் கட்டுப்பட்ட எனக்கு பாத்தியமான வேறு சொத்திற்கு பாத்தியப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

8) வா.சா.ஆ.5 இவ்வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் பாகம் பிரியாத சொத்துக்கள் உள்ளது. தாவா தாக்கல் செய்த பிறகும் பாகம் பிரியாத சொத்துக்களை பாகம் பிரித்து தரும்படி 1ம் பிரதிவாதியிடம் கேட்கவில்லை என்றாலும் அது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். நான் பாகம் பிரியாக சொத்துக்களை பாகம் பிரித்து தரும்படி கேட்டதால் 1ம் பிரதிவாதி 10.01.2015 தகராறு செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

9) தாவா சொத்திலிருந்த ஆர்.எஸ்.பதி மரங்களை 1ம் பிரதிவாதி வெட்டி விட்டார். தாவா சொத்தை சுற்றிலும் கம்பி வேலி போட்டு விட்டார். அதைப் பொறுத்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். இவ்வழக்கிற்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதி என் மீது புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது. பின்னர் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டுவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். 1ம் பிரதிவாதி தரப்பில் காவல் ஆய்வாளருக்கும், எனக்கும் அவருடைய வழக்கறிஞர்

மூலம் அறிவிப்பு கொடுக்கப்ட்டது என்றால் எனக்கு தெரியாது. பாஸ்கர் என்பவர் வங்கியில் பெற்ற கடனுக்காக தாவா சொத்தை நான் ஈடாக கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான்தான் ரூ.10 லட்சத்திற்கு வங்கியில் அடமானம் வைத்தேன்.

10) தாவா சொத்தின் நான்கெல்லை தவறு என்றாலும், வா.சா.ஆ.1 ல் கண்ட நான்கெல்லை தவறு என்றாலும், தாவா சொத்து என் அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்து முழுவதும் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை அலைகழிக்க வேண்டும் என்பதற்காக தவறான பத்திரத்தை வைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் பிரதிவாதிக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்றாலும், தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றாலும் சரியல்ல.

ஒப்பம்/ திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.